செய்தி வெளியீடு எண்: 48 நாள்: 29.06.2019.

***தேனி மாவட்டம்,***
***மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 9,542 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.11.71 கோடி மதிப்பிலான விலையில்லா மடிக்கணினிகளை வழங்கி துவக்கி வைத்தார்:***

******

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட போடிநாயக்கனூர் ஜமீன்தாரினி காமுலம்மாள் நினைவு மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் இன்று (29.06.2019) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற அரசு விழாவில், விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 9,542 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.11.71 கோடி மதிப்பிலான விலையில்லா மடிக்கணினிகளையும், மேலும், தமிழ்நாடு அரசு கம்பிடத் தொலைக்காட்சி நிறுவனத்தின் சார்பில் மாணவ, மாணவியர்கள் கல்வி பயிலுவதற்றான செட்டா பாக்ஸ்களை பள்ளி தலைமையாசிரியர்களுக்கு இன்று (29.06.2019) வழங்கினார்.

விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் பேசும் போது தெரிவித்ததாவது,

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தமிழக அரசு தமிழக மக்கள் வாழ்விற்கு எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை நீண்ட காலத்திற்கு பயன்தரும் வகையில் தொலைநோக்கு பார்வையுடன் திட்டங்களின் பயன் நேரடியாக பொதுமக்களை சென்றடையும் வண்ணம் திறம்பட செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தரம் வாய்ந்த கல்வியினை ஏழை, எளிய மாணவ, மாணவியர்களுக்கு வழங்கும் பொருட்டு மாநிலத்தின் மொத்த வருவாயில் நான்கில் ஒரு பகுதி நிதியினை கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்கீடு செய்து எண்ணற்ற கல்வி சார்ந்த பல்வேறு நலத்திட்டங்களை தீட்டி சிறப்பாகவும் செம்மையாகவும் செயல்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் 2011-ஆம் ஆண்டு முதலமைச்சராக பொறுப்பேற்றதிலிருந்து கல்விக்கு 20 ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து வந்தார்கள். தற்போது படிப்படியாக உயர்ந்து பள்ளி கல்வித்துறைக்கு 33 ஆயிரம் கோடி ரூபாயும், உயர் கல்வித்துறைக்கு 4 ஆயிரம் கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

மாணவ, மாணவியர்களின் கல்வி ஏழ்மையின் காரணமாக எந்த ஒரு சூழ்நிலையிலும் தடைபடக் கூடாது என்பதற்காக கல்வி ஊக்கத்தொகை, விலையில்லா பாட புத்தகம், நோட்டுப்புத்தகம், வருடத்திற்கு நான்கு ஜோடி சீருடைகள், காலணிகள், புத்தகப்பை, வடிவியல் பெட்டிகள், வரைபட புத்தகங்கள், கிரையான்ஸ், கணித உபகரணங்கள், பேருந்து பயணஅட்டை, விலையில்லா மிதி வண்டிகள், மாணவ, மாணவியர்கள் உலகளவிய கல்வி பெறுவதற்காக ரூ.16 ஆயிரம் மதிப்புள்ள விலையில்லா மடிக்கணிகள் போன்ற 16 வகையான கல்வி சார்ந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் பயன்களாக இந்தியாவிலேயே உயர் கல்வித்துறையில் தமிழகம் 2 வது இடத்தில் சிறந்து விளங்குகிறது. தேசிய சராசரி விகிதத்தில் பட்டப்படிப்பு படிப்பவர்களின் சதவிகதத்தில் 44 சதவீதமும் தமிழகம் உயர்ந்து முதலிடத்தில் உள்ளது.

தமிழக அரசின் சார்பில் போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 18 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலுகின்ற 2,120 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.2.62 கோடி மதிப்பிலான விலையில்லா மடிக்கணினிகள், கம்பம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 18 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலுகின்ற 2,702 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.3.31 கோடி மதிப்பிலான விலையில்லா மடிக்கணினிகள், பெரியகுளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 17 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலுகின்ற 2,489 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.3.05 கோடி மதிப்பிலான விலையில்லா மடிக்கணினிகள், ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 31 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலுகின்ற 2,231 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.2.73 கோடி மதிப்பிலான விலையில்லா மடிக்கணினிகள் என மொத்தம் 84 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலுகின்ற 9,542 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.11.71 கோடி மதிப்பிலான விலையில்லா மடிக்கணினிகள் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு முதற்கட்டமாக வழங்கப்படுகிறது. அதனைத்தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக பன்னொன்றாம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்படும்.

மாணவ, மாணவியர்களை சிறந்த சிற்பிகளாக்கும் பணி ஆசிரியர் பெருமக்களின் முக்கிய பணியாகும். மத, பிதா, குரு, தெய்வம் என நமக்கு கற்றுத் தந்து இருக்கிறார்கள், ஆனால், மாணவ, மாணவியர் தாய், தந்தையருக்கு இணையாக ஆசிரியர் பெருமக்களை மதித்து கல்வி பயின்று வாழ்வில் வளம் பெற வேண்டும். நமது மாவட்டத்தில் பணியாற்றும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்கள் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களால் பணி ஆணை பெற்று 34 ஆண்டுகள் கல்வித்துறையில் சிறப்பாக பணியாற்றி பணி நிறைவு செய்துள்ளார். அவர்களின் பணி நிறைவினை எல்லா செல்வங்களோடும் வளமாக வாழ வாழ்த்துகளையும், மாணவ, மாணவியர்களை சிறந்த வல்லுநர்களாக உருவாக்கிட தன்னலமற்று பணியாற்றும் ஆசிரியர் பெருமக்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழாவில், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.கே.ஜக்கையன், மாவட்ட வருவாய் அலுவலர் ச.கந்தசாமி, உத்தமபாளையம் வருவாய் கோட்ட சார் ஆட்சியர் டாக்டர் ஆர்.வைத்திநாதன், இ.ஆ.ப., முதன்மைக் கல்வி அலுவலர் அ.மாரிமுத்து, மாவட்ட கல்வி அலுவலர்கள் கு.ராஜேஸ்வரி, பெ.திருநாவுக்கரசு, எஸ்.திருப்பதி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.எம்.சையதுகான், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.கணேசன், வட்டாட்சியர் (கேபிள்) நஜிமுனிசா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**